***E-ISSN 2456-5148***
Online: www.ngmtamil.in

**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts05sp042026.06
https://ngmtamil.in/

# The Virtue of Eradicating the Disease of Hunger as Proclaimed in Manimekalai: A Study

**R. Pradeep*,**
Ph.D. Research Scholar, Department of Indian Languages and Literary Studies, University of Delhi, Delhi
*Correspondence: paper4conference.research@gmail.com.

**Article Info**
Received on 15-April-2026, Revised on 18-April-2026, Accepted on 20-April-2026, Published on 01-May-2026

## ABSTRACT

Among the classics of Tamil literature, the epic Manimekalai holds a significant place. It was authored by Seethalai Sathanar. In the realm of Tamil epics, Manimekalai is positioned right next to Silappatikaram. While Silappatikaram discourses on art, domestic life, governance, and nature, Manimekalai primarily focuses on Buddhist virtue (Dhamma). Through the titular character of Manimekalai, this epic expounds upon social virtues, projecting the eradication of the "disease of hunger" (pasipini) as the foremost virtue.

Although various ethical concepts such as impermanence and the theory of karma are discussed throughout the epic, it strongly emphasizes that relieving the hunger of living beings is the loftiest virtue of all.

Specifically, Buddhist virtues are put forward with the intent of eliminating social inequalities among people. While these virtues were shaped by the social and religious backgrounds of the Manimekalai era, it is essential to analyze their formation and convey their ethical value to contemporary society. Furthermore, the objective of this study is to identify the root causes of the hunger that plagued the people, and to re-examine the construction of virtue against that backdrop.

***KEYWORDS:*** *Manimekalai, Virtue (Aram), Disease of Hunger (Pasipini), Amudhasurabi (The Inexhaustible Bowl).*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

# மணிமேகலை கூறும் பசிப்பிணி தீர்த்தல் என்னும் அறம் – ஓர் ஆய்வு

***ரா. பிரதீப்**, முனைவர் பட்ட ஆய்வார், இந்திய மொழிகள் மற்றும் இலக்கிய ஆய்வுகள் துறை, தில்லிப் பல்கலைக் கழகம், தில்லி.

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களுள் மணிமேகலை காப்பியம் குறிப்பிடத்தக்க ஒன்று. மணிமேகலையை இயற்றியவர் சீத்தலை சாத்தனார் ஆவார். தமிழ்க் காப்பியங்களில் சிலம்பிற்கு அடுத்த நிலையில் மணிமேகலை முன்னிறுத்தப்படுகிறது. சிலப்பதிகாரம் கலை, இல்லறம், அரசு, இயற்கை என்பவற்றை பேசிய நிலையில் மணிமேகலை பௌத்த அறத்தை முதன்மையாகப் பேசுகிறது. இக்காப்பியம் மணிமேகலை என்ற பாத்திரத்தின் வழி சமூக அறங்கள் குறித்து பேசுகிறது. அதில் முதன்மையான அறமாகப் பசிப்பிணி போக்குவதை வெளிப்படுத்துகின்றது. மணிமேகலை காப்பியத்தின் வழி நிலையாமை, வினைக்கோட்பாடு எனப் பல அறக் கருத்துக்கள் பேசப்பட்டாலும், உயிர்களின் பசிப்பிணி தீர்த்தலே மிக சிறந்த அறம் என்பதை வலியுறுத்துகிறது.

குறிப்பாக மக்கள் மத்தியில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் களையும் நோக்கில் பௌத்த அறங்கள் முன்வைக்கப்படுகின்றன. மணிமேகலையின் கால கட்டத்தில் சமூகப்பின்னணியிலும் சமயப்பின்னணியிலும் அறங்கள் உருவாக்கப்பட்டாலும் அதன் உருவாக்கம் பற்றி ஆராய்வதும் தற்கால சமூகத்திற்கு அறத்தை எடுத்துக்கூறுவதும் அவசியம் ஆகும். மேலும் மக்களுக்கு ஏற்பட்ட பசிப்பிணிக்கான காரணங்களைக் கண்டறிவதுடன் அதன்பின்னணியில் இருந்து அற உருவாக்கம் பற்றி மீள்பார்வை செய்வது இவ்வாயின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:** மணிமேகலை, அறம், பசிப்பிணி, அமுதசுரபி.

**முன்னுரை**

ஒவ்வொரு காலகட்ட இலக்கியப் பின்னணியையும் சமூகச் சூழலையும் கவனத்தில் கொண்டு நோக்கும் போது மக்களின் நெடிய வாழ்வின் நிலையை அறிந்துகொள்ளலாம். இலக்கியங்கள் ஒரு காலகட்டத்தின் சமூக, அரசியல், பொருளாதார நிலைகளை அறிய உதவும் வரலாற்று ஆதாரமாக அமைகின்றன. இலக்கியம் என்பது சமூக உணர்வுகளையும் சிந்தனைகளையும் அச்சமூகத்தில் வாழும் மக்களின் வாழ்க்கையிலே தோன்றும் உணர்ச்சிகளையும் மொழிக் குறியீடு கொண்டு தருவதாகும் என இலக்கியம் பற்றி கார்த்திகேசு சிவத்தம்பி(2011) கூறுவது குறிப்பிடத்தக்கது.

அவ்வகையில் தமிழ் இலக்கியப் பரப்பில் அறம் சார்ந்த சிந்தனைகள் தொடர்ச்சியாக பதிவுசெய்யப்பட்டுவந்துள்ளன. சங்க இலக்கியங்களுக்குப் பின் எழுந்த காப்பியங்கள் சமயத்தை அடிப்படையாக கொண்டு சமயம் சார்ந்த அறக் கருத்துக்களைப் பேசுகின்றன. மணிமேகலை

அவ்வகையில் பௌத்தத்தை அடிப்படையாக கொண்டு அறத்தை முன்வைக்கிறது. அதில் மக்களுக்கு ஏற்பட்ட பசி பற்றிய குறிப்புகள் இடம் பெறுகின்றன.

மணிமேகலை என்ற பாத்திரத்தின் வழி பௌத்த அறங்களை இக்காப்பியம் முன்வைகின்றது. மணிமேகலை காப்பியத்தில் நிலையாமை, வினைக்கோட்பாடு எனப் பல பௌத்தக் கருத்துக்கள் பேசப்பட்டாலும், உயிர்களின் பசிப்பிணி தீர்த்தலே மிக சிறந்த அறம் என்பதைக் குறிப்பிடுகின்றது.

மக்கள் மத்தியில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்கும் நோக்கில் பௌத்த அறங்கள் முன்வைக்கப்படுகின்றன. அவ்வகையில் அறங்கள் சமூகப் பின்னணியிலும் சமயப்பின்னணியிலும் உருவாக்கப்பட்டாலும் அதன் தொடர்ச்சியை ஆராய்ந்து எடுத்துக்கூறுவது முக்கியத்துவமுடையதாகின்றது. மேலும் மக்களுக்கு ஏற்பட்ட பசிப்பிணிக்கான காரணங்களைக் கண்டறிந்து, அதன்பின்னணியில் இருந்து அற உருவாக்கம் பற்றி மீள்பார்வை செய்கின்ற வகையில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

**பௌத்த அறமும் பசிப்பிணி தீர்த்தலும்**

மணிமேகலையில் கூறப்படும் பௌத்த சமயக் கோட்பாடுகளை வினைக்கோட்பாடு, நிலையாமைக் கோட்பாடு, அறநெறிக்கோட்பாடு என மூன்றாக வி.பி.தேவதத் தா வகைப்படுத்தியுள்ளார். இதில் அறநெறி என்ற இடத்தில் நான்கு வாய்மைகள், ஐந்து சீலங்களையும் வினைக்கோட்பாடு என்ற இடத்தில் நல்வினை, தீவினைகளைப் பௌத்தம் முன்னிறுத்துகின்றது.

மற்ற சமயங்களில் இருந்து பௌத்தம் வேறுபடும் இடமாக பிராமண நூல்களில் கம்மம்(கர்மா) என்ற சொல் சமயச் சடங்குகளைச் சுட்டுதலும் பௌத்தத்தில் நற்செயல், தீச்செயல்களைச் சுட்டுதலையும் காணலாம். பிராமணங்களில் தேவதைகளும் சடங்களும் முக்கியத்துவம் பெறுதல் குறிப்பிடத்தக்க வேறுபாடாகும். பிராமணம் சடங்கு மயமே அறிவு என்றது. பௌத்தம் அறமயமே அறிவு மயம் என சோ.ந.கந்தசாமி(1977), டாக்டர் எஸ். தசிபணர் கூறுவதாக சொல்வதிலிருந்து பௌத்தம் அறவியலுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை அறிய முடிகின்றது.

> மிக்க அறமே விழுத்துணை ஆவது
>
> தானம் செய் என ……..(சிறைசெய் காதை 138-139)

இளமை, உடம்பு, பொருள் ஆகிய மூன்றும் நிலைபெறாதவைகள் என்று கூறி அறம் செய்வதே சிறந்தது என்கிறது. மணிமேகலை காப்பியம் விழுத்துணை அறமாகப் பசிப்பிணி தீர்த்தலையே முன்வைக்கின்றது.

**மணிமேகலையில் அறம்**

மணிமேகலை காப்பியத்தில் அறம் குறித்து இவ்வாறு கூறப்படுகின்றது,

> அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்

மறவா திதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டதில்
(ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை, 228-230)

இதன் வழி மண்ணில் உள்ள உயிர்களுக்கு முதன்மையானது உணவு தான் என விளக்குகிறது. உணவு, உடை, இருப்பிடம் என்ற மூன்றினையும் மக்கள் வாழ்விற்கான அடிப்படைகள் என்பதை முன்வைக்கிறது மணிமேகலை. அத்தோடு மக்களின் உடலை உணவின் பிண்டம் என்று முன்வைப்பதில் இருந்து சமூகத்தில் உணவின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறுகின்றது.

மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத் தோரே (பாத்திரம் பெற்ற காதை, 95-96)

உணவின் முக்கியத்துவத்தை உணர்த்தும் இடத்தில் இவ்வுலகில் வாழும் மக்களுக்கு உணவளிப்பவர் உயிர் கொடுப்பவர் என்கிறது.

மக்கள், தேவர் என்ற இருவருக்கும் பசிப்பிணி தீர்த்தல் என்ற ஒத்த அறத்தையே மணிமேகலை கூறுகிறது. மணிமேகலை மக்களையும் தேவர்களையும் ஒத்தநிலையில் வைத்து அறத்தைப் பேசுவது முக்கியத்துவமுடையதாகின்றது. அதிகாரப் படிநிலை அற்று அனைவருக்கும் ஒரே அறத்தை முன்வைக்கிறது மணிமேகலை.

மக்கள் தேவர் என இரு சார்க்கும்
ஒத்த முடிவின் ஓர் அறம் உரைக்கேன்
பசிப்பிணி தீர்த்தல் என்றே (அறவணர்த் தொழுத காதை,118-121)

அறம் எனப்படுவது மக்களின் பசிப்பிணி தீர்த்தல் என்ற நிலை இன்றளவும் சமூகத்தில் உள்ள ஏற்ற தாழ்வினைக் களைவதற்கும் உயிர்கள் அனைத்தையும் சமமாகப் பார்க்கும் தன்மையை நோக்கி நகர்த்தும் இடத்தில் முதன்மைபெறுகிறது.

மேலுள்ள இடங்கள் உணவின் வழி அறத்தை வரையறை செய்கின்றன. அறம் என்பதை மனிதர்களின் அடிப்படைகளோடும் உயிர் வாழ்தலுக்கான உணவோடும் இணைத்து பேசுகின்றது. பசி இனக்குழு சமூக அமைப்பில் பங்கிட்டு கொள்ளும் முறையால் தீர்க்கப்பட்டது. அதன் பின் உருவான உடைமை சமூக அமைப்பில் பசியைப் போக்க அறம் முதன்மையாக்கப்பட்டிருக்கின்றது. சமச்சீரற்ற சமூக போக்கு இதற்கு அடிப்படையான காரணமாகின்றது. இதனை இனக்குழுச் சமூகம், வீரயுகத்தின் ஊடாக வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டு மூவேந்தரின் முடியாட்சி சமூக அமைப்பைச் சமச்சீரற்ற போக்கில் மாற்றியதாக கைலாசபதி(2011) கூறுவதிலிருந்து சமச்சீரற்ற போக்கு மக்களிடையைப் பசியையும் உருவாக்கியிருக்கலாம் என்பதை அறிய முடிகின்றது.

**மணிமேகலை வழங்கும் பசியுடையோர் பட்டியல்**

உடைமையுடையவர்களுக்கு வளமான வாழ்க்கையும் அதே நேரத்தில் உடைமையற்றவர்களின் வாழ்க்கை அடிப்படை தேவைகள் கோரும்நிலையில் இருப்பது சமூகத்தின் துயர நிலை. இவ்விடத்தில் மணிமேகலை உணவு வழங்க அழைக்கும் மக்கள் பட்டியல் கவனத்துக்குரியது. ஆபுத்திரன் திறன் அறிவித்த காதையில் பார்வையற்றோர், காது கேளாதோர், கால் முடியாதவர்கள், கைவிடப்பட்டோர், நோயுற்றோர் என யாவரும் வருக என்று ஆபுத்திரன் அழைக்கிறான்.

காணார் கேளார் கால்முடப் பட்டோர்
பேணுநர் இல்லோர் பிணிநடுக்குற்றோர்
யாவரும் வருக……. ………… (ஆபுத்திரன் திறன் அறிவித்த காதை, 111-112)

….. ….. ……… எல்லா உயிரும் வருக எனப்
பைத்துஅரவு அல்குல் பாவை – தன் கிளவியின்
மொய்த்த மூ அறு பாடை மாக்களில்
காணார், கேளார், கால்முடம் ஆனோர்
பேணா மாக்கள், பேசார், பிணித்தோர்
படிவ நோன்பியர், பசிநோய் உற்றோர்
மடிநல் கூர்ந்த மாக்கள் யாவரும்;
பல்நூ றாயிரம் விலங்கின் தொகுதியும்;
மன்உயிர் அடங்கலும்; வந்து, ஒருங்கு ஈண்டி (கச்சி மாநகர் புக்க காதை, 219-227)

கச்சி மாநகர் புக்க காதையில் மணிமேகலை எல்லா உயிர்களையும் உணவுண்ண அழைக்கிறாள். பதினெட்டு மொழிபேசும் மக்களில் குருடர், செவிடர், முடவர், ஆதரவற்றோர், ஊமையர், நோயுற்றோர், தவ்வடிவு கொண்டவர்கள், பசிப்பிணி உடையவர் உடையின்றி வறுமையில் உள்ளவர்கள், விலங்குக் கூட்டம் எனப் பாகுபாடற்று எல்லா உயிர்களையும் அழைக்கிறாள் மணிமேகலை.

மேலுள்ள பட்டியலை நோக்க மணிமேகலையில் பசிப்பிணி தீர்த்தல் என்பது யாரை முன்னோக்கியது என்பது புலனாகும். மணிமேகலை காப்பியம் மக்களை ஆற்றா மக்கள், அல்ல மக்கள் என்று வகைப்படுத்துகிறது. செல்வருக்கு அளிப்பது அறத்தினை விலை பேசுவது என்றும் வறிஞர்களின் பசியைத் தீர்த்தலே உலகத்தின் உண்மை நெறி என்றும் மணிமேகலை கூறுகின்றது.

மணிமேகலை பகைமையை நீக்கி வறுமையுற்றோர்க்கு உணவளிப்பவரே வளமுடைய பேருலகில் வாழ்வதற்குரியவர் என்கிறது.

மல்லல்மா ஞாலத்து வாழ்வோர் என்போர்

அல்லல் மாக்கட்கு இல்லது நிரப்புநர் (சிறைவிடு காதை, 132-134)

அறத்தை ஆதிக்கத்தில் இருக்கும் மக்களிடத்து கூறி, விளிம்பு நிலை மக்களை நோக்கியதாக அறத்தை மாற்றிய இடம் மணிமேகலையின் சிறப்பு. சாவக நாட்டு அரசன் புண்ணியரசனுக்கு அரசின் கடமை என்பது மக்களுக்கான அடிப்படைகளைச் செய்வதுதான் சமூகத்தின் அடிப்படை அறம் என்கிறது மணிமேகலை காப்பியம்.

**பசிப்பிணிக்கான காரணங்கள்**

பசியை நோய் என்று சொல்லுவதன் வழி உணவை மருந்தாகச் (ஆருயிர் மருந்து, உயிர் மருந்து, பசிப்பிணி மருந்து) சீத்தலைச்சாத்தனார் முன்வைக்கிறார். உடலை உணவின் பிண்டம் என்றும் அவ்வுடலில் தோன்றும் பசியை நோய் என்று பதிவுசெய்வதென்பது பசியை அறியாது வாழும் மக்களை நோக்கி அறத்தைக் கட்டமைத்திருக்கிறது இக்காப்பியம் என்பது புலனாகிறது.

உடைமைச் சமூக உருவாக்கத்தின் பின் அதிக பொருள் வளத்தைக் கொண்ட மக்கள் அதிகார நிலையில் உள்ளவர்கள். அவர்களிடத்து நிலையாமையை உணர்த்தி அற வழியில் நடப்பதற்கான வழியினை இக்காப்பியம் கூறுகின்றது. அவ்விடத்தில் பசிப்பிணி தீர்த்தல் என்பதே அடிப்படையான அறம் என்று வழியுறுத்துகின்றது.

மணிமேகலை காப்பியத்தில் பசிக்கான காரணங்களை நோக்கும் பொழுது மழைவளம் குன்றிய போதும், இயற்கை பேரிடர்களின் போதும், மக்களை ஆட்சி செய்யும் மன்னர்களாலும், முன்வினையாலும்(சாபம்) பசி ஏற்படுகின்றது என்கிறது.

**இயற்கையால் ஏற்படும் பசி (பேரிடர்க் காலம், மழையற்ற காலம்)**

இயற்கைக்கு அனைவரும் சமம். இயற்கைப் பேரிடர் காலங்களிலும் மழைப் பெய்யாத நேரங்களிலும் மக்கள் வறுமையில் பசிப்பிணியில் துயருற்றதை மணிமேகலை காப்பியம் காட்சிப்படுத்தியுள்ளது.

பன்னீ ராண்டு பாண்டியநல் நாடு
மன்உயிர் மடிய மழைவளம் இழந்தது
வசித்தொழில் உதவ மாநிலம் கொழுப்ப
பசிப்புஉயிர் அறியாப் பான்மைத்து ஆதலின் (பாத்திர மரபு கூறிய காதை, 55-58)

மேலுள்ள வரிகள் மழை பெய்யாத பொழுது பாண்டிய நாட்டில் உயிர்கள் இறந்தன என்று பதிவுசெய்கிறது. ஆபுத்திரன் மணிபல்லவம் அடைந்த காதையில் சாவக நாடு பன்னிரண்டு ஆண்டுகள் மழையின்றி பஞ்சத்தால் உயிர்கள் இறந்ததைப் பதிவுசெய்கிறது.

பொன் எயில் காஞ்சி நாடுகவின் அழிந்து
மன்உயிர் மடிய மழைவளம் கரத்தலின் (காஞ்சி மாநகர்புக்க காதை, 56-57)

காஞ்சி மாநகர் மழையின்றி உயிர்கள் மடிந்து அழகற்று இருக்கின்றது. அங்கு வாழும் அறவோர்க்கும் உணவிட யாருமில்லை என்று அறவண அடிகள் மணிமேகலையைக் காஞ்சி நகருக்கு அழைக்கிறார்.

சாவக நல்நாட்டு தண்பெயல் மறுத்தலின்

ஊண் உயிர் மடிந்தது ........ ....... (பாத்திர மரபு கூறிய காதை, 74)

சாவக நாட்டில் மழை பெய்யாததால் உயிர்கள் இறந்தன என்பதை மணிமேகலை காட்சிப்படுத்திகிறது. மேற்கண்ட பதிவுகளின் வழி மழை இல்லாததால் மக்களுக்குப் பசி என்னும் பிணி ஏற்பட்டிருக்கிறது என்பதை இக்காப்பியம் சித்திரிக்கின்றது.

ஆபுத்திரன் பற்றிக் கூறுமிடத்து திருவின் செல்வம் பெருங்கடல் கொள்ள (பாத்திரம் மரபு கூறிய காதை,70) தன்னுடைய பெருஞ்செல்வங்களைக் கடல் கொள்ள எல்லாவற்றையும் இழந்து வருகிறான் என்று பதிவுச்செய்கிறார் சாத்தனார். கடலினால் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டு மக்களைத் துயரத்திற்குள்ளாக்கியிருக்கிறது. மழை பெய்யாததாலும், கடல் ஏற்படுத்தும் அழிவும் மக்களுக்குப் பசிப்பிணியை அளித்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது.

**போரினால் ஏற்படும் பசி**

போரில் அரசனுக்கு முக்கிய பங்கு உண்டு. மக்களை ஆளும் அரசனைக் கூறுமிடத்து கோன்நிலை திரிந்தால் கோள்நிலை திரியும் என்று உரைக்கிறது. செற்றமும் கலாமும் செய்யாது அகலுமின் (விழாவறைக் காதை, 63) என்று பகவரிடத்து சீற்றமும் போரும் கொள்ளாதே என்கிறது மணிமேகலை.

பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க என வாழ்த்தி (விழாவறை காதை, 70-71)

பசி, நோய், பகை என்ற மூன்றும் நீங்கி மழையும் வளமும் பெருக வேண்டும் என்ற இடத்தில் போருக்கு அடிப்படையான பகை நீங்கி வாழ வேண்டும் என்று கூறுவது குறிப்பிடத்தக்கது. இயற்கையால் பசி, பிணி ஏற்பட்டு மக்கள் துயரமடைவது உண்டு. ஆனால் இயற்கை அல்லாது மக்கள் பகையால் ஏற்படும் போராலும் வறுமை நிலை உருவாகும் என்பதை இதன் வழி அறியலாம். போரின்றி அரசன் பின்பற்ற வேண்டிய அறம் எது என்று மணிமேகலை எடுத்துக்கூறுகிறது.

அரசர் தாமே அருளறம் பூண்டால்
பொருளும் உண்டோ, பிறபுரை தீர்த்தற்கு?
அறமெனப் படுவது யாது? எனக் கேட்பின்
மறவாது இதுகேள் மன்உயிர்க்கு எல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல்என காவலன் உரைக்கும்
(ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை, 226-231)

உலகை ஆளும் அரசன் அருளறத்தைக் கடைப்பிடித்தால் எல்லா உயிர்களும் தாமே குற்றமற்றனவாக அமையும் என்று கூறி அரசனுக்கு அறிவுரை கூறுகிறது. மறத்திற்கு மாற்றாக அறத்தை வழியுறுத்துகின்றது மணிமேகலை காப்பியம்.

**சிறையில் உள்ளோருக்கும் பசித் தீர்த்தல்**

அரசனுக்கும் நகரப் பெரியோருக்கும் பிழை செய்தாரைத் தண்டித்து அடைத்து வைக்கும் சிறைச்சாலைக்குச் செல்கிறாள் மணிமேகலை. சிறைச்சாலையில் கொடிய பசியில் வருந்தும் மக்களுக்கு உணவு வழங்குகிறாள். அத்தோடு பசியை நீக்கி குற்றம் செய்தவர்களை அறநெறி படுத்திகிறாள்.

அதிர்கழல் வேந்தன் அடிபிழைத் தாரை
ஒறுக்கும் தண்டத்து உறுசிறைக் கோட்டம்
விருப்பொடும் புகுந்து, வெய்து உயிர்த்துப் புலம்பி
ஆங்குப் பசியுறும் ஆர் உயிர் மாக்களை
வாங்கு கைஅம் வருந்தநின்று ஊட்டலும்

(சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை, 42-46)

மேலுள்ளவற்றை நோக்க மணிமேகலை காலச் சமூகத்தில் பசிக்கான காரணங்களை அறியமுடிகிறது. மக்களின் வறுமை நிலையைப் போக்குவதில் உணவு முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. உணவு, உடை, இருப்பிடம் என்ற அடிப்படைகளை நோக்கி அறத்தை முன்வைப்பது குறிப்பிடத்தக்கது. அரசு மக்கள் நல சார்ந்ததாகவும், மக்கள் அறத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும் இருக்கவேண்டும் என்கிறது.

பௌத்தப் பள்ளிக்கு அருகில் அட்டில் சாலை, அருந்துநர் சாலை என்ற இடங்களின் வழி நிலையாக மக்களுக்கு உணவு வழங்குவதை மணிமேகலை எடுத்துக் கூறுகிறது.

**சாபத்தினால் ஏற்படும் பசி**

சாபத்தினால் காயசண்டிகை எனும் பெண் தீர்க்க முடியாத பசி நோயால் துன்புறுகிறாள். மணிமேகலை வைத்திருக்கும் அமுதசுரபியிலிட்ட உணவை உண்டு தனது கொடிய பசியையும் சாபத்தையும் போக்கிக்கொள்கிறாள்.

சாபம் பட்டு தனித்துயர் உறூஉம்
வீவுஇல் வெம்பசி வேட்கையோடு திரிதரும்
காய சண்டிகை எனும் காரிகை (பாத்திரம் கொண்டு பிச்சை புக்க காதை, 84-86)

**வினையால் ஏற்படும் பசி**

முற்பிறப்பில் செய்த தீவினையால் வறுமை ஏற்பட்டு பசி வருவதை மணிமேகலை காப்பியம் சித்திரிக்கின்றது. முன்பிறவியில் செய்த தீவினையால் கிழிந்த கந்தல் உடைகளை உடுத்திக் கொண்டு பசியோடு வெயில், மழை பாராது ஓரிடத்தில் நில்லாமல் நல்லறங்களைச் செய்து செல்வமுடையோரின் இல்லத்தில் நின்று இரப்பவர்களைக் காட்சிப்படுத்துகிறது.

நாவலொடு பெயரிய மாபெருத் தீபத்து,

வித்தி, நல்அறம் விளைந்த அதன்பயன்
துய்ப்போர் தம்மனை துணிச்சிதர் உடுத்து
வயிறுகாய் பெரும்பசி அலைத்தற்கு இரங்கி
வெயில் என முனியாது புயல் என மடியாது
புறங்கடை நில்லாது, அயர்வோர் பலரால் (பாத்திரம் பெற்ற காதை, 107-112)

**அமுதசுரபியின் வழிப் பசிப்பிணி தீர்த்தல்**

சமயங்கள் தங்களுக்கென விதிகளையும் சட்டங்களையும் கொண்டிருப்பவைகள். அப்படியான சமயப் பின்னணியில் பல அறங்கள் உருவாக்கப்பட்டாலும் அவை சமூக நிலைகளிலிருந்தே உருவாக்கப்படுகின்றன. பிளவுப்பட்ட சமூக அமைப்பில் செல்வம் குவிக்கப்பட்ட ஒரு பகுதியினரும் வறுமைநிலையில் ஒரு பகுதியினரும் இருக்கின்றனர். இப்படியான நிலைகளைக் களைய சில அறங்கள் உருவாக்கப்படுகின்றன.

அறங்களைச் செய்வதன் வழி பிறவிப்பிணியறுக்க முடியும் என்பது சமயங்களின் கருத்தாக இருக்கின்றது. மணிமேகலையும் வினைப்பயன் என்பதோடு பசி என்பதை இணைக்கிறது. சாபத்தினால் காயசண்டிகை பசி நோயில் இருப்பதும், அவளது பசிப்பிணியை மணிமேகலை தன் அறத்தின் வழி தீர்ப்பதும் நிகழ்கிறது. வினைப்பயனை முன்வைத்து அறம் செய்வதை வழியுறுத்துகிறது மணிமேகலை. இருப்பினும் இயற்கையில் பேரிடர் காலத்திலும் மழை பெய்யாத காலத்திலும் பகையினால் ஏற்படும் போரினாலும் மக்கள் பசியோடு இருந்துள்ளதைக் கூறுகின்றது. இவற்றுக்கெல்லாம் அமுதசுரபி என்னும் ஒன்றை வைத்து காப்பியம் முழுமையும் பசிப்பிணி போக்கப்படுவதும் அதை மணிமேகலை என்னும் பெண் பாத்திரத்தின் வழி நிகழ்த்தியிருப்பது முக்கியத்துவம் உடையதாகின்றது.

ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்ணை முதன்மைப்படுத்தியப் பாத்திரப் படைப்பு முக்கியத்துவமுடையதாகின்றது. மணிமேகலை அமுதசுரபியின் வழி குறைவில்லாது வறுமையில் உள்ளவர்களுக்கு உணவளிப்பதைக் காட்சிப்படுத்துவது அவளை அறத்துறவியாக மட்டுமல்லாது மாற்றத்தின் குறியீடாகவும் பெண்ணை முதன்மைப்படுத்துவதாகவும் பார்க்கலாம்.

அமுதசுரபி என்ற பாத்திரம் வளமை மற்றும் அறத்தின் குறியீடாகவும் அமைகிறது எனவும் நாம் புரிந்து கொள்ளலாம். அமுதசுரபில் இடும் உணவு குறைவின்றி பெருகுவது வளத்தையும் அதன்வழி பசிப்பிணி தீர்த்தல் என்பது அறத்தையும் குறித்து வளமை மற்றும் அறம் என்ற குறியீடாக அமுதசுரபி அமைகின்றது. அமுதசுரபி தொல்தாய் மற்றும் புராதன அன்னையின் குறியீடாகிறது என்றும் பெண் உடலுக்கும் உயிர்ப் பெருக்கத்திற்கும் உள்ள உறவையும் உயிர் உடல் காத்தல் என்கிற நிலையையும் தொல்தாய் படிமமாக அடையாளம் காண வேண்டும் என்று பிரேம்(2025) விளக்குவது குறிப்பிடத்தக்கது. மணிமேகலையைத் தொல்தாய் படிமமாக குறிப்பிடுவதும் மணிமேகலை என்ற பெண் பாத்திரம் சமயத் தருக்கங்களைக் கற்ற அறிவுடைய பெண் என்பதும் அமுதசுரபியின் மூலம்

பசிப்பிணி தீர்த்தல் என்பதும் ஆணை முதன்மையாக உடைய சமூக அமைப்பினால் ஏற்பட்ட வறுமையைப் போக்கும் இடத்தில் தொல்தாய் தன்மையில் பெண்ணை முதன்மையாகக் கொண்ட அற வாழ்வினை முதன்மையாக்குகிறது மணிமேகலை காப்பியம்.

**முடிவுரை**

போரினாலும் இயற்கைச் சீற்றங்களாலும் நிகழ்ந்த வறுமை நிலையை, அறவழிச் செல்லுதலை அடிப்படையாகக் கொண்டு உலக உயிர்களிடத்து உள்ள பசிப்பிணியைப் போக்குவது முக்கியமான அறம் என மணிமேகலை முன்வைக்கிறது.

பசிப்பிணிக்கான காரணங்களை நோக்குமிடத்து மழைவளம் இல்லாது போதலும், அரசனின் அறமற்ற ஆட்சியும் பகையும், முன்செய்த வினைகள் மற்றும் சாபத்தினால் பசி என்ற பிணி மக்களிடத்து வந்துசேர்கிறது என்பதை மணிமேகலை காப்பியத்தின் வழி அறியலாம். எல்லா உயிர்களுக்கும் உணவு அடிப்படை என்பதை மணிமேகலை முன்வைப்பதிலிருந்து பசித் தீர்த்தலே பேரறம் என்கிறது.

பசிப்பிணி தீர்த்தல் என்பதை அடிப்படையாக கொண்டு ஓர் அறம் உருவாக்கப்பட்டிருப்பதற்குச் சமூகப் பின்னணி முதன்மையான காரணமாக அமைகின்றது. இதனை மணிமேகலை முன்வைக்கும் பசிப்பிணிக்கான காரணங்களை நோக்குமிடத்திலிருந்து சமூகத்தின் சமச்சீரற்ற தன்மையும் இயற்கை பேரிடர்களாலும் ஏற்பட்ட வறுமை நிலையே பசிப்பிணி தீர்த்தல் என்னும் அறத்தின் உருவாக்கத்திற்குக் காரணமாக அமைகிறது என்பதை அறியமுடிகின்றது. இதனைப் பௌத்த சமயம் வினைப்பயன் வழி எடுத்துக்கூறி பசிப்பிணி தீர்த்தலை அறமாக முன்வைக்கின்றது. இத்தகைய பசிப்பிணித்தீர்த்தல் என்ற அறம் தமிழ் இலக்கிய மரபில் தொடர்ச்சியான ஒன்றாக வளர்ந்துள்ளது. திருமூலர், அப்பர், வள்ளலார் என இத்தகைய அறத்தின் தொடர்ச்சியைக் காணமுடியும்.

மணிமேகலை முன்வைக்கும் பசிப்பிணி தீர்த்தல் என்பது சமூகத்தில் விளிம்பு நிலையில் இருக்கும் மாந்தர்களின் நிலையை நோக்கியதாக அறங்கள் அமைகின்றன. சமநிலை அற்ற சமூகத்தில் மக்களுக்கான தேவைகளை முன்வைப்பதோடு ஒட்டுமொத்த சமூக அமைப்பினையும் பெண் வழியில் அறமுடையாதாக்குகின்றது இக்காப்பியம். பசி என்ற துயருடைய வாழ்வினைப் பசிப்பிணி தீர்த்தல் எனும் அறத்தின் வழி துயரற்ற வாழ்வாக மாற்ற முயற்சித்திருக்கிறது இக்காப்பியம்.

**பயன்பட்ட நூற்கள்**

[1.] கந்தசாமி,சோ. ந. *பௌத்தம்.* அவ்வை அச்சுக்கூடம்,1977.

[2.] கைலாசபதி,க. *தமிழ் வீரநிலை கவிதை.* குமரன் புத்தக இல்லம்,2021.

[3.] சிவத்தம்பி, கார்த்திகேசு. *தமிழிலக்கியத்தில் மதமும் மானுடமும்.* நியூ செஞ்சுரி புக்

a. ஹவுஸ்பிரைவேட் லிட்,2011.

[4.] சிதம்பனார்,சாமி, *சிலப்பதிகாரத் தமிழகம் மணிமேகலை காட்டும் மனித வாழ்வு.* தமிழ்மண்

a. பதிப்பகம்,2013.

[5.] துரைசாமிப் பிள்ளை, ஔவை. சு. *மணிமேகலைச் சுருக்கம் உரைக் குறிப்புகளுடன்.* தென்னிந்திய

a. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,1943.

[6.] பிரேம். *பெண்மை: தாய்மை பேய்மை பன்மெய்.* எதிர் வெளியீடு,2025.

[7.] மார்க்ஸ், அ. *நெஞ்சில் கனல் மணக்கும் பூக்கள் மணிமேகலை.* எழுத்து பிரசுரம்,2025.

[8.] முத்துமோகன்,ந. *இந்தியத் தத்துவங்களும் தமிழின் தடங்களும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

a. பிரைவேட் லிட்,2016.

[9.] ரமேஷ்,மு. *மணிமேகலையை வாசித்தலும் பகிர்தலும்.* தமிழறம் பதிப்பகம்,2023.

[10.] ரமேஷ்,மு. *புத்த அறநெறி நோக்கில் திருக்குறளும் மணிமேகலையும்.* பரிசல் புத்தக நிலையம்,2024.

[11.] வானமாமலை, நா. *தமிழர் பண்பாடும் தத்துவமும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்பிரைவேட் லிட்,1978.

[12.] வேங்கடசாமி,ந.மு. *மணிமேகலை.* தமிழ்மண் பதிப்பகம்,2014.

[13.] ஜகந்நாதன்,கி.வா. *தமிழ்க் காப்பியங்கள்.* அமுத நிலையம் லிமிடெட்,1991.

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.